**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>நாள். 09.07.2025</u>**

**<u>O.S. 133/2019</u>**

**<u>வா.சா. 4</u> – குத்தாலிங்கம்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சமயத்தில் நான் தென் தாமரைகுளம் காவல்நிலையத்தில் பணியாற்ற வில்லை என்றால் சரிதான். நான் எந்த ஆண்டு முதல் மேற்படி காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன் என்றால் 05.04.2025 முதல் பணியாற்றி வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள மூன்று முதல் தகவல் அறிக்கைக்கும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.20 முதல் 22 தவிர ஆவணங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 20, 21, 22-ல் உள்ள தரப்பினர்களுக்கு இடையில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிவில் வழக்கிகு சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை தான் வா.சா.ஆ.20 முதல் 22 .

வா.சா.ஆ.21 ல் 1 முதல் 3 எதிரிகள் வா.சா.ஆ.21 ல் உள்ள புகார்தாரர் மற்றும் பிற நபர்களுக்கு எதிராக புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக புகார்மனு ரசீது கொடுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் வாதிகள் தாக்கல் செய்துள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை தள்ளபடி செய்யப்பட்ட பின்பு

பிரதிவாதிகளால் வாதிகளுக்கு மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர், துணை காவல்துறை கண்காணிப்பாளர், ஆய்வாளர் தென்தாமரைகுளம் காவல்நிலையம், உள்துறை செயலாளர், Chief secretary ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ரசீதில் ஆய்வாளர் தென்தாமரைகுளம் காவல்நிலையம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் Acknowledgement Card வழக்கறிஞரிடம் இருந்து ஆய்வாளர் தென்தாமரைகுளம் காவல்நிலையத்திற்கு அனுப்பியது என்றால் சரிதான். மேற்படி நோட்டீஸ் பெற்றுக் கொண்டபின் காவல்நிலையத்தில் உள்ள வரவு பதிவேட்டில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பின் படி ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி மூன்று முதல் தகவல் அறிக்கையும் எந்த தேதியில் புகார்மனு கொடுத்து பதியப்பட்டது என்றால் வா.சா.ஆ.20 க்கான புகார்மனு 05.08.2018 அன்று கொடுக்கப்பட்டது 06.08.2018 அன்று முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. வா.சா.ஆ.21 க்கான புகார்மனு 15.11.2018 அன்று கொடுக்கப்பட்டது 28.03.2019 அன்று நீதிமன்ற அறுவுறுத்தலின் படி முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. வா.சா.ஆ.22 க்கான புகார்மனு 19.04.2022 அன்று கொடுக்கப்பட்டது 06.05.2022 அன்று முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. மேற்படி முதல் தகவல் அறிக்கையில் உள்ள எதிர்மனுதாரர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் எவ்வித முதல் தகவல் அறிக்கையும் பதிவு

செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி முதல் தகவல் அறிக்கை அனைத்தும் வாதிகளுக்கு வேண்டி வாதிகளின் உறவினர் ஸ்ரீதரன் காவல் துறையில் பாணியாற்றி வருவதால் அவர்மூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்போ பின்போ கோவில் அமைந்துள்ள இடம் யாருடையது என்பது குறித்து விசாரணை மேற்கொண்டோமா என்றால் இல்லை அது சிவில் சம்மந்தமான பிரச்சனை என்பதால் விசாரிக்கவில்லை. மேற்படி மூன்று முதல் தகவல் அறிக்கையும் புகார் தாரர்கள் மற்றும் எதிர்தரப்பினர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்பது குறித்து விசாரணை செய்தோமா என்றால் புகார்தாரர்கள் செட்டிவிளையை சர்ந்தவர்கள் எதிர்தரப்பினர்கள் பொத்தையடி ஊரை சார்ந்தவர்கள். மேற்படி கோவில் இருக்கும் இடமும் பொத்தையடி என்றால் சரிதான்.

வழக்கு வாதிகள் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகளின் தூண்டுதலின் பேரில் கோவிலுக்கு வரவிடக்கூடாது என்று தடுப்பதற்கு வேண்டி பொய்யாக புகார் கொடுத்ததன் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் குற்ற செயலில் ஈடுபட்டதை குறிப்பிட்டு புகார் கொடுத்ததை மறைத்து மேற்படி முதல் தகவல் அறிக்கை ஒருதலை பட்சமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியும் பிரதிவாதியின் வழக்கறிஞரும் அறிவிப்பு கொடுத்த பின்பும் முதல் தகவல் அறிக்கை ஒருதலை பட்சமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.